2023 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

பதிவு செய்தாகிவிட்டது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) 'இல்லை' என்பதை பதிவு செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ஆளுங்கட்சியின் சார்பாக ஓர் அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள்* police report–ஐ *படித்தார்கள். அதற்கு எழுந்து நீங்கள் மறுப்பைத் தெரிவிக்கிறீர்கள். அந்த மறுப்புக்கு மதிப்பு கொடுத்து, நாங்கள் திருப்பிச் சொல்கிறோம். அது நாளைக்கு மறுபடியும் தவறாக இருந்தால் திருத்தி வாசிக்கப்படும். இவ்வளவு பெருந்தன்மையை (குறுக்கீடுகள்) அதை விடுங்கள். நான் பேசுவதை எடுத்துக்கொள்ளுங்கள். நான் பேசுவதை எடுத்துக்கொள்ளுங்கள். அதை விட்டுவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் சொல்லி விட்டேன். நாளைக்கு.*

4. உரிமை மீறல் பிரச்சினை

20-3-2023 அன்று நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டபோது அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் குறித்து தினமலர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை என்பது மிக கண்ணியத்திற்குரிய, மாண்பிற்குரிய அவை. இந்த அவையினுடைய கண்ணியத்திற்கும், மாண்புக்கும் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கான நிதிநிலை அறிக்கையை வாசித்து அளித்தபோது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் எங்கள் இருக்கைக்கு முன்னால் பொருத்தப்பட்டிருக்கிற*

[திரு. தி. வேல்முருகன்] [*2023 மார்ச் 23*

இந்தக் கணினியைக் கீழ்நோக்கி, அந்த வரிகளைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணினியில் படிப்பது மற்றவர்கள் கண்ணுக்கு எந்த மூலையில் இருந்து பார்த்தாலும் தூங்குவதுபோல் தெரிந்திருக்கலாம். ஆனால், இந்த மாடத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அரசு உயரதிகாரிகளுக்கு நிகராக எமதருமை நான்காவது தூண் என்று போற்றப்படுகின்ற பத்திரிகை நண்பர்களுக்கு மாடத்தில் இடமளித்து, இந்தச் செய்திகளை நாட்டு மக்களுக்குக் கொண்டு செல்கின்ற ஒரு வாய்ப்பை இந்த மன்றம் தந்திருக்கிறது. அதில் அனைத்துப் பத்திரிகைகளையும் நான் குறை சொல்லவில்லை. குறிப்பாக, தினமலர் என்கிற ஒரு பத்திரிகை இதுகுறித்து நாடு முழுவதும் செய்தி வெளியிட்டிருக்கிறது. தலை சொறிந்து, திக்கித் திணறி, தூங்கி வழிந்த அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று. இந்த அரசுக்கு அவப் பெயரை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு சமூக வலைதளங்களில் பல்வேறு விதங்களில் இந்தச் செய்திகள் பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கின்ற அமைச்சர் அவர்கள் அதனை அளிக்கின்றபோது, மூத்த அமைச்சர் பெருமக்களே இதுபோன்று தூங்கி வழியலாமா என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. தமிழ்நாட்டில் பல இலட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்டிருக்கிற இணையதளங்களும் இதைச் செய்தியாக்கிக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் உரிமையை மீறிய ஒரு செயலாக இந்தப் பத்திரிகை இதுபோன்று செய்தி வெளியிட்டிருப்பதை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால், இது மட்டுமல்ல; தமிழைக் கொச்சைப்படுத்துவதுபோல், தமிழை அவமானப்படுத்துவதுபோல், பல்வேறு தலைப்புகளில் மிகக் கேவலமான, மோசமான அநாகரிகமான, சட்டமன்ற விதிகளில் சொல்வதுபோல் unparliamentary words-ஐப் பயன்படுத்தித்தான் டீ கடை பெஞ்ச்சிலும் எழுதுகிறது; கடிதம் வந்ததாகவும் எழுதுகிறது; cartoon-ம் வெளியிடுகிறது. ஆக, இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோல், இந்த அவைக்கும், இந்த அவையினுடைய மாண்புக்கும் களங்கம் கற்பிக்கின்ற வகையில் இன்றையதினம் செய்தி வெளியிட்ட இந்தப் பத்திரிகையின்மீது இந்த அவை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விதி 219-ன்கீழ் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2023 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆம் தேதி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை வாசித்துக் கொண்டிருந்தபோது, அவையில் இருந்த அனைவரும்* Tab screen*-ஐ கவனித்துக் கொண்டிருந்தோம். நல்ல பல திட்டங்களை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை, நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறாரென்ற அடிப்படையிலே, மிகவும் அக்கறையுடன் அதைக் கவனத்துடன் நாங்கள் கவனித்துக் கொண்டிருந்ததை, அவதூறைப் பரப்புகின்ற வகையில், தினமலர் பத்திரிகையிலே 'சில அமைச்சர் பெருமக்களும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் தூங்கிக் கொண்டிருந்ததாக' செய்தி வந்திருக்கிறது. இது இந்த அவைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற ஒரு செயல்; அதேபோல, உறுப்பினர்களுடைய உரிமையை மீறுகின்ற செயல். அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற அந்தப் பத்திரிகையின்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்குப் பரிந்துரை செய்து, விசாரிக்க வேண்டுமென்று, வருங்காலங்களில் இதுபோன்ற கீழ்த்தரமான செய்திகளை வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று, எங்களுடைய உரிமையைக் காக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி எண் 219-ன்கீழ் இன்று அவை உரிமை மீறலைப்பற்றி கொடுத்திருந்தோம். இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலில் ஓர் அருமையான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.*

[திரு. கு. செல்வபெருந்தகை] [*2023 மார்ச் 23 முற்பகல் 10–35*

ஓர் அரசியல் கட்சித் தலைவர் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார், இது தினமலர் இல்லை, தினமலம் என்று சொன்னார். அது, இன்னும் பத்திரிகை குறிப்பிலே இருக்கின்றது. கடந்த வாரம்கூட, ஒரு செய்தி வந்தபோது, எப்படி இப்படியெல்லாம், அநாகரிகமாக, கொச்சைப்படுத்தி, விளிம்புநிலை மக்களை எழுத முடியும் என்று நான் கேட்டபோது, குமார் என்பவர் இருக்கிறார், அவரிடம் பேசுங்கள் என்று சொன்னார்கள். தினமலர் ஆசிரியர், நிருவாகி குமார் என்பவருடன் பேசும்போது, அவர் பத்திரிகை சுதந்திரம் என்று சொன்னார். பத்திரிகை சுதந்திரம் மகாத்மா காந்தியடிகள் எதற்காக வாங்கிக் கொடுத்தார் என்றால், கைநீட்டி நடப்பதற்குத்தான்; கைநீட்டி பிறர் மூக்கைத் தொடுவதற்கில்லை என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பற்றியும், அவருடைய தனி உரிமையை, தனிப்பட்ட முறையில் பாதிக்கின்ற அளவிற்கு எழுதியிருக்கிறார்கள். அதேபோன்று, அந்தப் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருக்கையில், தூங்கிக் கொண்டிருக்கிறார்கள், தூங்கி வழிகிறார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். இந்தத் தொடுதிரைக் கணினியைப் பார்க்கும்போது, நம்முடைய கண்களெல்லாம் திரையைப் பார்க்கும்; பார்ப்பதற்கு கண் மூடி இருப்பதுபோல்தான் தெரியும். ஆனால், திரையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதைக் கொச்சையாக, அப்பட்டமாக, உண்மைக்குப் புறம்பாக ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறதென்றால், இந்த தினமலர் பத்திரிகையின்மீது கடுமையான உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு முறை, இரண்டு முறை இல்லை. எங்கெங்கெல்லாம் ஏழையெளிய மக்கள், விளிம்புநிலை மக்கள் உரிமைக்காக, சமூக நீதிக்காகப் போராடுகிறார்களோ, அவர்களைக் கொச்சைப்படுத்துகின்ற ஓர் இயக்கமாக இந்தத் தினமலர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இனிமேலும் தாமதிக்காமல், இந்த அவை இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய உரிமைகளையும், மாண்புமிகு அமைச்சர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்பிரச்சினையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இதில் அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், இப்பிரச்சினைக் குறித்து ஆய்ந்து, அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226-ன்கீழ், அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. அரசினர் சட்டமுன்வடிவு (மறு ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022

(சட்டமன்றப் பேரவையில் 19–10–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (மறு ஆய்வு செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2022) (சட்டமன்றப் பேரவையில் 19–10–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.)*

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2022) சட்டமன்றப் பேரவையில் 19–10–2022 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து 6–3–2023 ஆம் நாளிடப்பெற்ற ஒரு நேர்முகக் கடிதமும், அதனுடன் குறிப்பு ஒன்றும் இணைத்து எனக்கு வரப்பெற்றது. அனுப்பி வைக்கப்பட்ட சட்டமுன்வடிவையும் திருப்பி அனுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற நேர்முகக் கடிதத்தினை, தற்போது படிக்க விழைகிறேன்.